# சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபார அபிவிருத்தி (SMED) கடன் திட்டம்

**சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபார அபிவிருத்தி (SMED) கடன் திட்டம்**
**SMED கடன் திட்டத்தின் கீழ் உற்பத்திகள்**

1. முதலீட்டுக் கடன்
2. குறுகியகால கடன் (STL)
3. நாணயப் பத்திர வசதிகள் (LC)
4. நிரந்தர மேலதிக பற்று வசதிகள் (POD)
5. பிணைப்பொறுப்பு முறி வசதிகள் (LG)

சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபார அபிவிருத்தி (SMED) கடன் திட்டத்தின் கீழ் ஒரு வியாபாரத்தின் முதலீட்டு தேவைகள் மற்றும் நிலையான செயற்பாட்டு மூலதன தேவைகள் என்பவற்றிற்காக கடன் வசதி வழங்கப்படுகின்றது. விவசாயம், விவசாயத்தை முதன்மையாகக் கொண்ட வியாபபாரங்கள், வாணிப வியாபாரங்கள் பால் மற்றும் பால் சார்ந்த கருத்திட்டங்கள், கால்நடை வளர்ப்பு, அலங்கார மீன்கள், கடற்றொழில், தகவல் தொழில்நுட்பம், ஆடைத் தொழில், சுற்றுலா மற்றும் ஹோட்டல் கருத்திட்டங்கள், நிர்மாணம், அச்சு தொழில், கல்வி, சேவைகள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வியாபாரங்கள் மற்றும் ஏனைய எந்தவொரு பொருளாதார நடவடிக்கை ஆகிய பிரிவுகளை இங்கு முன்னுரிமை அளிக்கப்படும் பிரிவுகளாக எடுத்துக் காட்ட முடியும்.

**விசேட பயன்கள்**

- போட்டி ரீதியான வட்டி வீதம்
- நெகிழ்வான மீளச் செலுத்தும் திட்டங்கள்
- தேவைப்பட்டால் ஆரம்ப கடன் தொகையை மீளச் செலுத்துவதை ஆரம்பிப்பதற்காக சலுகை காலத்தைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள முடியும்.
- தளர்வான நிபந்தனைகள்

**தகுதி**

- வருடாந்தம் ரூ.மில்.20.0இற்கு மேற்பட்ட ரூ. 1.0 பில்லியனை விட குறையாத வருடாந்த விற்பனையைக் கொண்டுள்ள முன்னுரிமை பிரிவுகளில் ஈடுபட்டுள்ள சிறு மற்றும் நடுத்தர அளவிலான வாடிக்கையாளர்கள். (தேசிய சிறு மற்றும் நடுத்தர அளவு என்ற வரைவிலக்கணத்திற்கு அமைவாக)
- சாத்தியமான வியாபாரமாக இருக்க வேண்டும்.
- முக்கியமாக வாடிக்கையாளரின் மீளச் செலுத்தும் ஆற்றலின் கீழ் கடன் வசதிகளை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.
- வியாபார பதிவுச் சான்றிதழ் இருக்க வேண்டும்.
- எமது வங்கியில் அல்லது வேறு எந்தவொரு வங்கியிலும் 6 மாதங்கள் முழுவதும் திருப்திகரமான முறையில் பேணுகின்ற நடைமுறைக் கணக்கொன்றைக் கொண்டுள்ள வாடிக்கையாளராக அல்லது ஆற்றல் வளமிக்க வாடிக்கையாளராக இருக்க வேண்டும்.

**கடன் தொகையின் அளவு**

- வாடிக்கையாளரின் தேவை, பங்களிப்பு, நோக்கம், மீளச் செலுத்தும் ஆற்றல் மற்றும் கடன் பெற்றுக்கொள்ளுவதற்கு இருக்கும் தகைமை என்பவற்றின் மீது தங்கியிருக்கிறது.

**வட்டி வீதம்**

- மக்கள் வங்கியின் இணையத்தளம் - www.peoplesbank.lk இற்குள் பிரவேசித்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**மீளச் செலுத்தும் காலம்**

- முதலீட்டுக் கடன் வசதிகள் - இரண்டு வருட (2) சலுகைக் காலம் உட்பட ஆகக் கூடியது 10 வருடங்கள்
- செயற்பட்டு மூலதன கடன் - ஆகக் கூடியது 3 வருடங்கள். (சலுகைக் காலம் ஏற்புடையதாகாது)
- மாதாந்த தவணைப் பணம் என்ற வகையில செலுத்தீடுகளை மேற்கொள்ள முடியும்.

**கட்டணம், தரகு, வட்டி போன்றவை**

- நிலையான அல்லது மாறுபடும் வட்டி வீதம்
- நிலுவை தவணைப்பணத்திற்கான தண்டனை வட்டி
- ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன் தயாரிப்பு கட்டணம்
- உடன்படிக்கை செய்து கொண்ட காலத்திற்கு முன் கடன் தொகையைச் செலுத்தி முடிக்கும்போது அறவிடப்படுகின்ற கடன் தொகையை முற்கூட்டியே செலுத்தி தீர்க்கும் கட்டணம்
- மதிப்பீட்டு கட்டணம் (ஏற்புடையதானால் மாத்திரம்)
- சட்ட கட்டணம் (ஏற்புடையதானால் மாத்திரம்)
- அரச முத்திரைக் கட்டணம் (ஏற்புடையதானால் மாத்திரம்)
- காப்புறுதி தவணைப்பணம் (ஏற்புடையதானால் மாத்திரம்)

**விண்ணப்பம் செய்யும் முறை**

- நாடு முழுவதும் அமைந்துள்ள மிக அருகாமையில் உள்ள கிளைக்கு அல்லது சேவை நிலையத்திற்குப் பிரவேசித்து கடன் வசதிகளுக்காக விண்ணப்பம் செய்ய முடியும்.

**நியதிகள் மற்றும் நிபந்தனைகள்**

- தற்போதைய வியாபார செயலாற்றுகை மற்றும் நிதி மதிப்பீட்டுக்கு உட்பட்டு கடன் வசதி கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.
- நிதி வசதிகளை கவனத்தில் எடுத்துக்கொள்ளும்போது வங்கி ஏற்றுக்கொள்ளக் கூடிய பிணைப்பொறுப்புகளை வழங்குவது, பொதுவாக வாடிக்கையாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.
- கடன் வசதிகளை கவனத்தில் எடுத்துக்கொள்ளும்போது வங்கியினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய உள்ளக பிணைப்புகள் மற்றும் கொடுகடன் தகவல் பணியக பிணைப்பு (CRIB) என்பவை பரீட்சிக்கப்படும்.

- கடன் வசதிகள் சம்பந்தப்பட்ட தகவல்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பவை நடப்பு காலத்திற்கு ஏற்ப மாற்றங்களுக்கு உள்ளாகும். ஆகவே, புதிய தகவல்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பவை பற்றி அறிந்துகொள்ளுவதற்காக அருகில் உள்ள கிளையுடன் தொடர்புகொள்ள முடியும்.
- வங்கியின் SMED நிதி குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

**முறைப்பாடுகளைக் கையாளும் நடவடிக்கைமுறை**

- வாடிக்கையாளர்கள் info@peoplesbank.lk ஊடாக முறைப்பாடுகளை எமக்கு அனுப்ப முடியும்.
- குறித்த கிளை, பிராந்திய தலைமை அலுவலகம் அல்லது தலைமை அலுவலகத்திற்கு எழுத்துமூல கோரிக்கையை முன்வைக்க முடியும்.
- குறித்த கிளை, பிராந்திய தலைமை அலுவலகம் அல்லது தலைமை அலுவலகம் என்பவற்றிற்கு அழைப்பை ஏற்படுத்தி/விஜயம் செய்து முறைப்பாடுகளை முன்வைக்க முடியும்.

**மேலதிக தகவல்களுக்கு**

- **அழைப்பு நிலையம் - 1961**
- **தலைமை அலுவலகம் - 0112481481**
- **சிறு மற்றும் நடுத்தர அளவு வியாபார அலகு - 0112481356**